**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**

**வழக்கு எண். சிசி.360/2021**

**வழக்கு சாட்சி. 1**

| | | |
|---|---|---|
| **பெயர்** | **:** | **சந்தியாகு ஆரோக்கியம்** |
| **தந்தை பெயர்** | **:** | **மைக்கேல்ராஜ்** |
| **கிராமம்** | **:** | **திண்டுக்கல்** |
| **தாலுக்கா** | **:** | **திண்டுக்கல்** |
| **ஜாதி** | **:** | |
| **தொழில்** | **:** | **சிறப்பு சார்பு ஆய்வாளர், போக்குவரத்து** |
| **சமயம்** | **:** | |
| **வயது** | **:** | **57** |

**19.06.2023**

**1,2 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது திண்டுக்கல் நகர் வடக்கு போக்குவரத்து காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.08.2018 அன்று நகர் வடக்கு காவல்நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியிலிருந்த போது மதியம் சுமார் 14.00 மணிக்கு நானும், சார்பு ஆய்வாளர் மகேஷ் , முநிகா மோகன சுந்தரம் ஆகிய மூவரும் AMC ரோடு, சாலை ரோடு ஆகிய பகுதிகளில் ரோந்து சென்ற போது சார்பு ஆய்பாளருக்கு கிடைத்த தகவலின் படி டட்லி பள்ளி பின்புறம் கேட் அருகில் வெள்ளை கலர் பிளாஸ்டிக் பையுடன் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பாக்கெட்டுக்களை விற்பதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் நாங்கள் மூவரும் சம்பவ இடத்திற்கு செல்லும் போது எதிரிகள் இருவர் மற்றும் 4 சிறுவர்கள் அந்த இடத்தில் இருந்தார்கள். நாங்கள் அருகில் செல்லும் போது 3 சிறுவர்கள் ஓடிவிட்டார்கள்.

2) அங்கிருந்த ஒரு சிறுவனை சார்பு ஆய்வாளர் விசாரித்த போது அந்த சிறுவன் பணம் கொடுத்தால் சைனி புகையிலை தருவார்கள் என்றும் தினமும் மதிய உணவு வேளையில் எதிரிகள் இருவரும் அந்த இடத்தில் புகையிலை பொருட்களை விற்றுக் கொண்டிருப்பார்கள் என்றும், எதிரிகள் ராஜபாண்டி, செந்தில்குமார் ஆகியோரை விசாரணை செய்த போது 1ம் எதிரி ராஜபாண்டி தானாக முன்வந்து தனிநபர் சாட்சிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் . வெள்ளைகலர் பிளாஸ்டிக் பையில் இருந்து திறந்து காண்பித்தார். அதில் சைனி பாக்கெட் 20,RMD பாக்கெட்டுக்கள் 20, சாந்தி பாக்கு பாக்கெட்டுகள் 17 ,இருந்தது. 2ம் எதிரி செந்தில் தானாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். வெள்ளை நிற பிளாஸ்டிக் பையை திறந்து

காண்பித்தார். அதில் சாந்தி பாக்கு பாக்கெட்டுக்கள் 20, RMD பாக்கெட்டுக்கள் 13 இருந்தது. சைனி பாக்கெட்டுக்கள் 17 , SM -18, இருந்தது. மேலும 1 வது எதிரி இரயில்வே ஸ்டேசன் முட்புதர் அருகே மறைத்து வைத்திருந்த பாக்கெட்டுக்களை எடுத்து ஒப்படைத்தார்.

3) 1 ம் எதிரி எடுத்து கொடுத்த பாக்கெட்டிலிருந்து 4 ரூபாய் பாக்கு ரூ, 1400/-RMD பாக்கு ரூ.3200/-, 3) SM சர்கா பாக்கு மற்றும், சைனி பாக்கு ரூ-4000/- மும் , சாந்தி பாக்கு ரூ.19,000/- மும் , கொடுத்ததை அத்தாட்சியில் கைப்பற்றி எதிரி மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய சார்பு ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை .**

1) 17.08.2018 ம் தேதி நான் எத்தனை மணிக்கு ரோந்து பணிக்கு சென்றோம் என்றால் 14.00 மணிக்கு சென்றோம். அன்றைய தினம் பள்ளி வேலை நாள்தான் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. முதல் விசாரணையில் சொல்லியுள்ள 4 சிறுவர்கள் பற்றிய விவரங்களை விசாரித்து தெரிந்து கொண்டோமா என்றால் 3 பேர் ஓடிவிட்டார்கள். ஒருவரை மட்டும் விசாரித்து தெரிந்து கொண்டோம். நாங்கள் விசாரித்த ஒருவரின் பெயர், விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

2) உயர் அதிகாரிகளின் உத்தரவுக்கு இணங்க எதிரிகளுக்கு எதிராக தவறாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 17.8.2018 ம் தேதி முன்னாள் பாரதபிரதமர் வாஜ்பாய் 16.08.2018 ம் தேதி இறந்து விட்டதால் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டிருந்தது என்றால் ஞாபகம் இல்லை. சம்பவ தினத்தன்று ஆஜர் எதிரிகள் இருவரும் சம்பவ இடத்திலேயே இல்லை என்றால் சரியல்ல. சம்பவ தினமாக குறிப்பிடப்பட்ட தேதியன்று எதிரிகள் திண்டுக்கல் பழைய மேற்கு தாலுகா அலுவலகத்தில் பட்டாமாறுதல் செய்ய மனு கொடுக்க சென்று அன்றைய தினம் விடுமுறை என்பதால் வெளியே இருந்த டீக்கடையில் டீ சாப்பிட்டுக் கொண்டிருந்த போது சாட்சி கையொப்பம் போட வேண்டும் என காவல்நிலையம் வரச் சொல்லி எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கைதவறாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

3) எனது விசாரணையில் எதிரிகள் இருவரும் என்ன வேலை செய்து வருகிறார்கள் என விசாரித்து கொண்டோமோ என்றால் இல்லை. எதிரிகள் இருவரும் சைக்கிள் மற்றும் எக்ஸ் எல் வண்டிகளில் ஒவ்வொரு டீ கடைக்கும் பீடி, சிகரெட், மிட்டாய் , நிஜாம்பாக்கு, தீப்பெட்டி, விக்ஸ் மிட்டாய், ஹால்ஸ் மிட்டாய், சாக்குலேட், ஆகியவற்றை விற்பனை செய்து தொழில் செய்து பிழைத்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் தற்போதும் அதே வேலைதான் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. உயர்அதிகாரிகளின் அழுத்தத்தினால் எதிரிகள் மீது புள்ளிவிவர கணக்கிற்காக தவறாக வழக்கு பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

4) எதிரிகளிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிாகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI

Digitally signed by N MEENATCHI
Date: 2023.07.01 16:40:13 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**

**வழக்கு எண். சிசி.360/2021**

**வழக்கு சாட்சி. 2**

| | | |
|---|---|---|
| **பெயர்** | **:** | **சதீஷ்குமார்** |
| **தந்தை பெயர்** | **:** | **பொன்னுச்சாமி** |
| **கிராமம்** | **:** | **முளையூர்** |
| **தாலுக்கா** | **:** | **திண்டுக்கல்** |
| **ஜாதி** | **:** | |
| **தொழில்** | **:** | **ஸ்வீட் ஸ்டால் வேலை** |
| **சமயம்** | **:** | |
| **வயது** | **:** | **34** |

**19.06.2023**

**1,2 <u>எதிரிகள் ஆஜர்.</u>**

<u>**முதல் விசாரணை**</u>

. நான் முளையூரில் குடியிருந்து மதுரையில் ஸ்வீட் ஸ்டாலில் வேலை செய்து வருகிறேன். கடந்த 17.8.2018ம் தேதி எனது சொந்த வேலை விசயமாக திண்டுக்கல் டவுனுக்கு வந்த போது டட்லி பள்ளி பின்புறம் நடந்து வந்து கொண்டிருந்த போது போலிசார் ஒரு கடையில் விசாரித்து பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தார்கள். அது என்ன பொருட்கள் என தெரியாது. கடையில் விசாரித்துக் கொண்டிருந்த நபரை அடையாளம் தெரியாது தற்போது நினைவில் இல்லை. என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் 3 அத்தாட்சிகளில் உள்ள 1வது கையொப்பம் மட்டும் என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையொப்பம் மட்டும் என்னுடையதுதான். **( 3 அத்தாட்சிகளிலுள்ள 1வது கையொப்பம் . அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.3 ஆகவும், ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1வது கையொப்பம் அ.சா.ஆ.4 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

கடந்த 17.8.18ம் தேதி டட்லி பள்ளி பின் கேட்டின் அருகே சொந்த வேலை காரணமாக நின்று கொண்டிருந்த போது வடக்கு காவல்நிலைய போலிசார் ஆஜர் எதிரிகளை கைது செய்து ஒப்புதன்ல வாக்குமூலம் பெற்றதாகவும், எதிரிகள் இருவரும் சம்பவ இடத்தில் ஆஜர் செய்த புகையிலையை

அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும் பின்பு 1 வது எதிரி குட்செட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த புகையிலை பொருட்களுக்கு அத்தாட்சி தயார் செய்ததாகவும் மேற்படி அத்தாட்சிகளிலும், ஒப்புதல் வாக்குமூலத்திலும் சாட்சியாக கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI
Digitally signed by N MEENATCHI
Date: 2023.07.01 16:40:20 +0530

Judicial Magistrate No.II
Dindigul.

**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.2, நீதிமன்றம், திண்டுக்கல்,**

**வழக்கு எண். சிசி.360/2021**

**வழக்கு சாட்சி. 3**

| | | |
|---|---|---|
| **பெயர்** | **:** | **செபஸ்டியான்** |
| **தந்தை பெயர்** | **:** | **சேசுராஜ்** |
| **கிராமம்** | **:** | **வேம்பார்பட்டி** |
| **தாலுக்கா** | **:** | **திண்டுக்கல்** |
| **ஜாதி** | **:** | |
| **தொழில்** | **:** | **டிரைவர்** |
| **சமயம்** | **:** | |
| **வயது** | **:** | **33** |

**19.06.2023**

**1,2 எதிரிகள் ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் வேம்பார்பட்டியில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். கடந்த 17.8.2018ம் தேதி எனது சொந்த வேலை விசயமாக திண்டுக்கல் டவுனுக்கு வந்த போது டட்லி பள்ளி பின்புறம் நான் நின்று கொண்டிருந்த போது போலிசார் ஒரு கடையில் விசாரித்து பொருட்களை எடுத்துக் கொண்டிருந்தார்கள். அது என்ன பொருட்கள் என தெரியாது. கடையில் விசாரித்துக் கொண்டிருந்த நபரை அடையாளம் தெரியாது தற்போது நினைவில் இல்லை. என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் 3 அத்தாட்சிகளில் உள்ள 2வது கையொப்பம் மட்டும் என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையொப்பம் மட்டும் என்னுடையதுதான். **( 3 அத்தாட்சிகளிலுள்ள 2 வது கையொப்பம் . அ.சா.ஆ.5 முதல் அ.சா.ஆ.7 ஆகவும், ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 2வது கையொப்பம் அ.சா.ஆ.8 ஆகவும், குறியீடு செய்யப்படுகிறது.)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 17.8.18ம் தேதி டட்லி பள்ளி பின் கேட்டின் அருகே சொந்த வேலை காரணமாக நின்று கொண்டிருந்த போது வடக்கு காவல்நிலைய போலிசார் ஆஜர் எதிரிகளை கைது செய்து ஒப்புதன்ல வாக்குமூலம் பெற்றதாகவும், எதிரிகள் இருவரும் சம்பவ இடத்தில் ஆஜர் செய்த புகையிலையை

அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும் பின்பு 1 வது எதிரி குட்செட்டில் இருந்து எடுத்து ஆஜர் செய்த புகையிலை பொருட்களுக்கு அத்தாட்சி தயார் செய்ததாகவும் மேற்படி அத்தாட்சிகளிலும், ஒப்புதல் வாக்குமூலத்திலும் சாட்சியாக கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

N MEENATCHI

Digitally signed by N MEENATCHI
Date: 2023.07.01 16:40:28 +0530

Judicial Magistrate No.II
Dindigul.